DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 380 /2023 |
| Deposition of witness | : | PW-3 |
| Name | : | முத்துலட்சுமி |
| Father's /Husband Name | : | கணேசன் |
| Village | : | திருச்சி |
| Taluk | : | திருச்சி |
| Age | : | 52 |
| Occupation | : | இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 20th day May 2024.
Accused present.

**முதல் விசாரணை:-**

அ..சா.1 எனது மாமா பொன்னு, அ.சா.2 எனது கணவர் அவார். எனது கணவர் நலம் இயற்கை நலவாழ்வு மற்றும் யோகா ஆராய்ச்சி மையம் பாரம்பரியம் அரிசி வியாபாரம் செய்து வந்தார். கடந்த 24.08.2022 ஆம் தேதி மாலை 06.15 மணியளவில் கும்பகோணம் குவாலிட்டி இன் விகா ஓட்டலில் பரதநாட்டிய நிகழச்சிக்கு நானும், எனது கணவர், அ.சா.1 அவரது குடும்பதாருடன் சென்றோம். நிழச்சி முடிந்து இரவு 08.45 மணிக்கு வந்து பார்த்தபோது அ.சா.1 வீட்டு மற்றும் பீரோவின் கதவு திறந்துகிடந்தது. உள்ளே சென்று பார்த்தபோது பீரோவில் இருந்த மொத்தம் 48 பவுன் நகைகள் காணவில்லை. இது சம்பந்தமாக அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் அளித்தார். சுமார் 6 நாட்கள் கழித்து அ.சா.1 வீட்டில் வேலை செய்யும் ஆஜர் எதிரி இலக்கியா நகையை திருடி சென்றதாக தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

சம்பவத்திற்கு மறுநாளும் போலிசார் என்னை விசாரித்தார்கள். சம்பவத்திற்கு சுமார் 6 நாட்கள் கழித்து 02.09.2022 அன்று எனது கணவர் அ.சா.1 வீட்டுக்கு எதிர் வீட்டில் உள்ள cctv பதிவுகளை என்னிடம் காண்பித்தபோது எதிரி திருடியதை தெரிந்து கொண்டேன். அப்போதுதான் அ.சா.1ன் குடும்பத்திற்கும் எதிரி திருடி சென்றதாக தெரியும் என்றால் சரிதான். cctv பதிவுகளை போலிசாரிடம் அ.சா.1ம் எனது கணவரும் கொடுத்தார்கள். நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும், வேறொரு நபரிடமிருந்து நகையை கைப்பற்றி எதிரிக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd./- M. Elavarasi,
Judicial Magistrate No.I,
Kumbakonam.